

# ப்ரியா வேப்பமரம்...வித்யா புங்கை மரம்...கதிர் தென்னைமரம்...




நியூஸ் ஏந்தி பவன்

## சர்வோஜனா பள்ளி

இந்திய நாடு விடுலை பெறுவதற்கு முன்பு 1922-ல் சர்வோஜனா பள்ளியில் படித்தவர்களே இன்று கோவையின் முக்கியப் புள்ளிகள். ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்திலேயே தமிழ்வழிக் கல்வியைப் போதித்த பள்ளி இது. இங்கேதான் காலை ப்ரேயரில் வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கலந்துகொண்டு, தாம் இயற்றிய தேசியக் கீதத்தைத் தம் வாயால் பாடினார். இங்கே ஒரு நிகழ்ச்சிக்கு வந்த தந்தை பெரியார், பள்ளியின் பாடத்திட்டங்கள், நடைமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுவிட்டு, குறிப்பு நோட்டில், இந்தப் பள்ளிக்குக் கடவுள் அருள்புரிவாராக என்று எழுதி வைத்திருக்கிறார்! தமிழகத்திலேயே முதல் பெண் உடற்கல்வி ஆசிரியையை வேலையில் அமர்த்தியது இந்தப் பள்ளிதான். இப்பள்ளி கோவை பீளமேடு பகுதியில் இருக்கிறது.


* சர்வோஜனா பள்ளி

## மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி ஆராய்ச்சி மையம்

மேட்டுப்பாளையம் கோத்தகிரி சாலையில் அமைந்துள்ளது கோவை வனக் கல்லூரி. இங்கு வன ஆராய்ச்சி, விலங்குகள் பாதுகாப்பு, வனம் தொடர்பான படிப்புகள்... ஆகியவை சொல்லித் தரப்படுகின்றன. வனக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இங்கே டி.எஃப்.ஓ. பயிற்சி பெறுகின்றனர். இதன் மாணவர்கள் ஒருங்கிணைந்து 'ஃபோரஸ்' என்ற அமைப்பை நடத்தி வருகின்றன. இதன் முக்கிய நோக்கமே இயற்கை ஆர்வலர்களை ஊக்குவிப்பதும், அவர்களின் பதும்தான். வனம் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் இங்குள்ள நூலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

## திவ்யோதயா பல்சமய உறவு மையம்

நம்மைப் பிரிக்கும் உணர்வுகளைவிட இணைக்கும் உணர்வுகளே மேலானவை என்ற கோட்பாட்டோடு இயங்கி வருகிறது திவ்யோதயா பல்சமய உறவு மையம். மத நல்லிணக்கத்துக்காக இயங்கிவரும் இவ்வமைப்பின் நினைவுத் தூணின் அடிப்பாகம், மழைநீர் சேகரிக்கும் விதமாக அமைந்துள்ளது. பல்வேறு மத நல்லிணக்கங்களும், இலக்கிய நிகழ்வுகளும் அரங்கேறி வருகின்றன. இந்த அமைப்பில் நிரந்தரமாக ஒரு ஓவியக் கண்காட்சி இருப்பது இம்மையத்தின் சிறப்பு. ஆனால், இப்படி ஒரு ஓவியக் கண்காட்சி இருக்கிறது என்பதே கோவை வாசிகள் பலருக்குத் தெரியாது. கோவை ரயில் சந்திப்புக்கு எதிர்புறம் உள்ளது இம்மையம்.


* யோகநாதன்

## இயற்கை ஆர்வலர்

கடந்த இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் மரக்கன்றுகளை நட்டுச் செய்த பசுமைப் புரட்சிக்காக எர்த் மேட்டர்ஸ் ஃபவுண்டேஷன் என்கிற அமைப்பு, 'எக்கோ வாரியர்' விருதை வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. யாருக்கு? யோகநாதன் என்கிற அரசு பஸ் கண்டக்டருக்கு. இந்த விருதைப் பெறும் முதல் தென்னிந்தியர் யோகநாதன். ''நீலகிரி, தஞ்சாவூர், கோவை... போன்ற மாவட்டங்கள்ல நிறைய மரங்களை நட்டு வெச்சிருக்கேன். பள்ளிக் குழந்தைகளுக்கும் மரம் நடறதைப் பத்தி நிறைய பேசியிருக்கேன். யாரு மரம் நடறாங்களோ அவங்களோட பேரையே மரத்துக்கும் வெச்சுடுவேன். இப்படி வந்ததுதான் ப்ரியா வேப்பமரம். கதிர் தென்னை மரம், வித்யா புங்கை மரம்னு... தமிழ்நாட்டுல ஏகப்பட்ட மரம் இருக்கு. அவங்க பேர் வைக்கறதுனால குழந்தைகளும் மரத்தைப் பத்திரமா பாத்துக்கறாங்க...'' என்கிறார் யோகநாதன்.

## கோவை கிட்ஸ் கிங்டம்..

சாய்பாபா காலனி என்.ஆர்.எஸ். சாலையிலுள்ள கிட்ஸ் கிங்டம் பொழுது போக்குக்குச் சிறந்த இடம். சிறுவர்கள், பெரியவர்களென அனைவரும் விளையாடும் வண்ணம் அனைத்துச் சாதனங்களும் உள்ளன. ரூ 5 முதல் ரூ 20 வரை விளையாட்டுக் கட்டணங்களை வசூலிக்கிறார்கள். குழந்தைகளுக்கான டிபன் ஐட்டங்களும் இங்கு கிடைக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளில் குழந்தைகளுக்கு இலவசப் பரிசுகளும் உண்டு. பெரியவர்களுக்கு செய்தித்தாள்களும், அமர்ந்து படிக்க நாற்காலிகளும் உண்டு.